# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029196

1. District மாவட்டம் : புதுக்கோட்டை | PS: காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year ஆண்டு: 2017 | FIR No. மு.த.அ. எண்: 9/2017 | Date நாள்: 20.10.2017

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்: Prevention of corruption Act. 1988 | Sections பிரிவுகள்: 7 of P.C. Act 1988

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 11.10.2017 | Date to : நாள் வரை 20.10.2017 at

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் at 12.45 Hrs. | Time to : நேரம் வரை 12.45 Hrs.

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.10.2017 | Time : நேரம் 10.00 Hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — யூனியன் அலுவலகம் விராலிமலை, புதுக்கோட்டை, 40 K.M. மேற்கு.

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. மா. சேகர் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. மாரி.

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி ஆதிதிராவிடர் காலனி, [illegible], விராலிமலை தாலுகா, புதுக்கோட்டை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. ஜோனா, உதவி பொறியாளர், யூனியன் அலுவலகம், விராலிமலை, புதுக்கோட்டை

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   Arising out of preliminary Enquiry.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், 20.10.2017ம் தேதி காலை 10.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு. மா.குமார், S/o. மாரி, நீர்பழனி, விராலிமலை தாலுகா, என்பவர் புதுக்கோட்டை லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து எழுத்து மூலமான ஒரு புகார்மனு கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புனர், திரு. மா.குமார், S/o. மாரி, நீர்பழனி, விராலிமலை தாலுகா, புதுக்கோட்டை (மாவட்டம்), பெறுநர், உயர்திரு. லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், புதுக்கோட்டை. அய்யா, நான் நீர்பழனி ஆதிதிராவிடர் காலனியில் குடியிருந்து வருகிறேன். எனது அப்பாவுக்கு கடந்த 15 வருடங்களுக்கு முன்பு அரசாங்கத்தால் தொகுப்பு வீடு கட்டி கொடுத்தார்கள். அந்த வீட்டில்தான் தற்போது குடியிருந்து வருகிறேன். மேற்படி வீடு தற்போது மிகவும் சேதமடைந்துவிட்டதால் எனது பெயரில் மேற்படி கிராம சர்வே எண்.289/2பி உள்ள 50.50 ஏர்ஸ் புஞ்சை நிலத்தில் முதலமைச்சரின் பசுமை வீடு கட்டும் திட்டத்தில் வீடு ஒன்று

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ....................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் ....................
Rank நிலை .................... No. எண் ....................

பெற்று கட்டலாம் என்று முடிவு செய்து 2017–ஜூலை மாதத்தில் எங்கள் ஊரைச் சேர்ந்த முன்னாள் சேர்மன் திருமூர்த்தியிடம் வீடு ஒன்று ஒதுக்கீடு செய்ய சிபாரிசு செய்யும்படி கேட்டேன். அவரும் செய்வதாக சொல்லி என்னுடைய குடும்ப அட்டை நகல், ஆதார்அட்டை நகல், சிட்டா ஆகியவற்றை நீர்பழனி ஊராட்சி எழுத்தரிடம் கொடுக்கும்படி சொன்னார். அதன்படி அவரிடம் கொடுத்தேன். அவர் குடும்ப அட்டை நகல், ஆதார்அட்டை நகல் சிட்டா ஆகியவற்றின் பின்புறம் என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார். பிறகு 15 நாட்கள் கழித்து முன்னாள் சேர்மன் திருமூர்த்தி என்னை பார்த்து வீட்டிற்கு சிபாரிசு செய்துவிட்டதாகவும், குடும்ப அட்டை நகல், ஆதார்அட்டை நகல், சிட்டாஆகியவற்றை யூனியனில் வேலை பார்க்கும் லதாவிடம் கொண்டு போய் கொடுக்கும்படி சொன்னார். அதன்படி அதை நான் கொண்டு போய் கொடுத்தேன். அதை அவர் வாங்கி சரிபார்த்து விட்டு பத்து, இருபது நாட்களில் வீடு கட்ட உத்தரவு வரும் என்று சொன்னார்கள். அதன் பிறகு ஆடி மாதம் எங்கள் ஊராட்சி எழுத்தர் திரு.மாரிமுத்து என்னிடம் என் மனைவி ரெங்கநாயகி பெயரில் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். வீடு ஒதுக்கீடு உத்தரவு நகல் கேட்டதற்கு பிறகு தருகிறேன் என்று கூறி மூன்று நாட்கள் கழித்து விராலிமலை யூனியன் ஏஇ திருமதி.ஜோனா அவர்கள் என் இடத்தை மார்க் செய்ய வருவதாகவும், இடத்தை சுத்தம் செய்து வைக்கும்படி சொன்னார். அதன்படி அன்று காலை 11.30 மணியளவில் ஏஇ திருமதி.ஜோனாவும், அவருடன் உதவியாளரும் மற்றும் ஊராட்சி எழுத்தரும் இடத்தை வந்து பார்த்து மார்க் செய்துவிட்டு, என்னிடம் ஏஇ திருமதி.ஜோனா அவர்கள் பேஸ்மட்டம் வரை கட்டிவிட்டு தன்னை வந்து பார்க்கும்படியும், அப்போது ஒரு பில் தொகையையும், 50 மூட்டை சிமெண்டும், 350 கிலோ கம்பியும் தருகிறேன் என்று கூறினார். அதன்படி நான் வேலை ஆரம்பித்து பேஸ்மட்டம் வரை வீட்டை கட்டி முடித்துவிட்டு, ஆவணி மாதம் ஆரம்பத்தில் ஏஇ திருமதி.ஜோனா அவர்களை போய் பார்த்தேன். அப்போது எனக்கு 50 மூட்டை சிமெண்டும், 340 கிலோ கம்பியும் கொடுத்து ஒரு நோட்டில்கையொப்பம் வாங்கி கொண்டார்கள். பில்தொகை கொடுக்கவில்லை. ஏஇ திருமதி.ஜோனா அவர்களிடம் கேட்டதற்கு சன் சைடு வரை வீட்டை கட்டி விட்டு வந்து பாருங்கள். இரண்டு பில் தொகையையும் சேர்த்து வாங்கி கொள்ளலாம் என்று சொன்னார். அதன்படி சன் சைடு வரை வீட்டை கட்டிவிட்டு ஆவணி கடைசியில் யூனியன் ஆபிஸிற்கு போய் ஏஇ திருமதி.ஜோனா அவர்களை பார்த்தேன். அப்போது எனக்கு 56 மூட்டை சிமெண்டும், ஜன்னல் 5ம், கதவு 4ம் கொடுத்து ஒரு நோட்டில் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். பில்தொகை கொடுக்கவில்லை. பில் தொகை கேட்டதற்கு வீட்டை ஒட்டிய பிறகு மூன்று போட்டோ எடுத்து கொண்டு என்னை வந்து பாருங்கள் என்று சொன்னார்கள். அதன்படி

அக்டோபர் 5ஆம்தேதி அதாவது புரட்டாசி மாதம் பௌர்ணமி அன்று வீட்டை ஒட்டி விட்டு மறுநாள் என் மனைவியை வீட்டின் முன்பு நிற்க வைத்து போட்டோ எடுத்து, அதில் மூன்று காப்பியை ஊராட்சி எழுத்தரிடம் கொடுத்தேன். பிறகு இரண்டு நாட்கள் கழித்து ஊராட்சி எழுத்தரிடம் போய் பில் தொகை எப்போது கிடைக்கும் என்று கேட்டேன். அதற்கு அவர் தீபாவளிக்குள் கிடைத்து விடும் நீ போய் ஏஇ அம்மாவை பார் அவங்க தான் பில் எழுதி ஓகே பண்ணனும் என்று சொல்லி, நான் கொடுத்த போட்டோவை என்னிடம் கொடுத்து ஏஇ அம்மாவிடம் கொடுக்கச் சொன்னார். அதன் படி 11.10.2017ஆம் தேதி காலை சுமார் 12.45 மணியளவில் யூனியன் ஆபிஸ்க்கு போய் ஏஇ அம்மாவை பார்த்து மூன்று போட்டாவை கொடுத்து சீக்கிரம் பில் போட்டு கொடுங்கள் அம்மா என்று சொன்னேன். அதற்கு அவங்க மூன்று பில்லையும் போட்டு தருகிறேன் ரூ.2,000/- எனக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் நகையை அடகு வைத்து வீடு கட்டியுள்ளேன் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் ரூ.2000/- கொடுத்தால் தான் பில் போட்டுக்கொடுப்பேன் என்று சொல்லிவிட்டு ஜெராக்ஸ் கடைக்கு சென்று பசுமை வீட்டிற்கு பில் வாங்குவதற்கான படிவம் என்று கேட்டு மூன்று படிவம் வாங்கி வரும்படி சொன்னார்கள். அதன்படி ரூ.30/- கொடுத்து அந்த படிவத்தை வாங்கி அந்த அம்மாவிடம் கொடுத்தேன். அப்போது அவர்கள் மறுநாள் வியாழக்கிழமை தன்னை வந்து பார்த்து ரூ.2000/- பணத்தை கொடு என்று சொன்னார். நேரம் இருந்தால் நீர்பழனி வந்து நீ கட்டிய வீட்டை பார்க்க வருவேன் என்று சொன்னார். பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். மறுநாள் வியாழக்கிழமை யூனியன் ஆபிஸிற்கு போகாமல் வீட்டில் இருந்தேன். அன்று மாலை 4.30 மணியளவில் ஏஇ திருமதி.ஜோனா அவர்களின் உதவியாளர் என் வீட்டிற்கு வந்து ஏஇ அம்மா வீட்டை பார்த்து வரச்சொன்னார்கள் என்று கூறி வீட்டை வந்து பார்த்து அளவுபடிதான் கட்டியுள்ளீர்களா என்று கேட்டார். அதற்கு நான் அளவுபடிதான் கட்டியுள்ளேன். கூட அளவில் கட்டவில்லை என்று சொன்னதும் ஏஇ அம்மாவை வந்து பாருங்கள் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். பிறகு எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நான் போய் ஏஇ திருமதி.ஜோனா அவர்களை பார்க்கவில்லை. பிறகு நான் 16.10.2017ஆம் தேதி காலை 11.45 மணியளவில் நீர்பழனி பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருக்கும்போது ஏஇ அம்மாவும், அவரது உதவியாளரும் நின்று கொண்டிருந்தனர். அவர்களை பார்த்தவுடன் வணக்கம்மா என்று கூறி பில் ரெடி பண்ணிட்டீங்களா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் என்னை தீபாவளி கழித்து 19.10.2017ஆம தேதி வியாழக்கிழமை வந்து ஆபிஸில் பார்த்து கவனித்தால் தான் பில் ரெடியாகும் என்று சொன்னார். எனக்கு காய்ச்சல் வந்துவிட்டதால் அவர்களை போய் பார்க்கவில்லை. மேலும் ஏஇ திருமதி.ஜோனா அவர்கள் கேட்ட லஞ்சப்பணத்தை

கொடுக்க விருப்பமில்லை. இன்று 20.10.2017ஆம் தேதி ஏஇ திருமதி.ஜோனா அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.2000/-ஐ ஏற்பாடு செய்து கொண்டு வந்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்ட விராலிமலை யூனியன் ஏஇ திருமதி.ஜோனாஅவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் நான் வீடு கட்டியுள்ள இடத்திற்கான சிட்டா நகலை இணைத்துள்ளேன். இப்படிக்கு (ஒப்பம்) மா.குமார், 20.10.17

Sir, Received the petition on 20.10.2017 at 10.00 hrs and copy of same is sent to the SP.,SR.,DVAC, Chennai for requesting PE. (Sd) R.Bangajam, 20.10.2017 Inspr. /V&AC/PK. R.B [signature] 20/10/17 Inspr. V&AC, PDK.

After receiving the order of Preliminary Enquiry SP, SR, DVAC, Chennai in PE.355/2017/RDP/PK, Dated 20.10.2017 and then I registered a PE in Pudukkottai V&AC PE No.06/2017/RDP/PK. (Sd-) R.Bangajam, 20.10.2017, Inspr./V&AC/PK. R.B [signature] 20/10/17 Inspr. V&AC, PDK.

முதல்நிலை விசாரணைக்காக எதிரி பணம் கையூட்டாக கேட்டுள்ளதை உறுதிப்படுத்த புகார்தாரர் மா.குமாரை மீண்டும் சென்று எதிரியை சந்திக்குமாறு அறிவுரை கொடுத்து அவர்களுக்கு இடையே நடைபெறும் உரையாடலை பதிவு செய்வதற்காக தலைமைக் காவலர் 1461 கருணாநிதி என்பவருடன் Voice Recorder கொடுத்து 20.10.17ம் தேதி 11.45 மணிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதன்படி புகார்தாரர் விராலிமலை யூனியன் அலுவலகத்திற்கு சென்றும், எதிரியை சந்தித்த போது இருவருக்கும் இடையே நடந்த உரையாடலை பதிவு செய்து 14.00 மணிக்கு லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்தனர். பதிவு செய்து வந்த உரையாடலை கேட்டதில், எதிரி மனுதாரரிடம் ரூ.2000/- கேட்டதற்கான முகாந்திரம் இருந்தது. இந்த விபரத்தை காவல் கண்காணிப்பாளர், SR, DVAC, Chennai அவர்களுக்கு தகவல் தெரிவித்தும், இன்று 20.10.17 தேதி 17.30 மணிக்கு புதுக்கோட்டைஊ.த.க. பிரிவு கு.எண்.09/2017 U/s 7 of PC Act 1988-படி வழக்கு பதிவு செய்தேன். Sd/- R.Bangajam, 20.10.2017 Inspr./V&AC/PDK. R.B [signature] 20/10/17. Inspr. V&AC, PDK.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடனும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை Voice Recorder மூலம் பதிவு செய்யப்பட்டதை, கணிணி மூலம் குறுந்தகட்டில் (CD) பதிவிறக்கம் செய்த CD ஒன்றை இணைத்து கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, புதுக்கோட்டை அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல்தகவல் அறிக்கையின் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

R.B [signature] 20/10/17 Inspr. of Police,